**செ.வெ.எண்-01** **நாள்-01.03.2020**

# அரியலூர் மாவட்ட அளவிலான விளையாட்டு தகுதி மற்றும் இளைஞர்நல மேம்பாடு ஆலோசனைக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறையின் சார்பில் மாவட்ட அளவிலான விளையாட்டு தகுதி மற்றும் இளைஞர் நல மேம்பாடு ஆலோசனைக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாவட்டத்தில் பிரபலமான விளையாட்டுகளில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், விளையாட்டு மேம்பாடு அடைய செய்ய வேண்டும். மாநில தேசிய அளவிலான போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்துவதும் மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டு சங்கங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். கிராமப்புறங்களில் திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிந்து அவர்களின் நன்மைக்காக விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

மேலும், மாவட்டத்திலுள்ள கிராமங்களுக்கிடையே விளையாட்டு மற்றும் உடல்திறன் தகுதியினை உருவாக்க உடற்பயிற்சி கல்வியின் பயன்குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். விளையாட்டினை மேம்படுத்த உடற்திறன் தகுதியினை தனிப்பட்ட முறையில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். திறமையான இளைஞர்களை தேர்வு செய்து அவர்களை மாநில இளைஞர் விளையாட்டு விழாவில் பங்கேற்கவும், மாநில அளவில் விருதுகள் பெறவும் ஊக்குவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் ஜெயக்குமார்ராஜா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முத்துகிருஷ்ணன், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் இராஜேந்திரன், கையுந்துபந்து பயிற்றுநர் ஆர்.பொற்கொடி மற்றும் குழு உறுப்பினர்கள், தனியார் சிமெண்ட் ஆலை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**